**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.212** **நாள் : 11.08.2025**

**மணலி மண்டலத்திற்குட்பட்ட கொசப்பூர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன மாட்டுக் கொட்டகையை பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் பணிக்கு கால்நடை வளர்ப்போர் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

மணலி மண்டலம், வார்டு-17, செட்டிமேடு, கொசப்பூர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன மாட்டுக் கொட்டகையை பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் பணிக்கு கால்நடை வளர்ப்போர் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பப் படிவத்தை www.chennaicorporation.gov.in என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், கால்நடை கொட்டகையை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறை குறித்த விவரங்களும் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை zone2manali@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 25.08.2025க்குள் அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது. மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 28.08.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு கூராய்வு செய்யப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**